

கலைஞர் 100 1924 - 2024

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

Murasoli

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி


murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 85 – ஒலி : 77 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஐப்பசி 10 – செவ்வாய்க்கிழமை 27 அக்டோபர் 2026 – வெளியூர் 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 85 - Issue 77 : Thiruvalluvar Year - 2057 - Ippasi 10 - Tuesday 27 October 2026 - Dak 8 Pages ₹ 5.00

தி.மு.க. கட்டமைத்த தமிழ்நாடு; த.வெ.க. ஆட்சியில் கொடுங்காடு!

கொலைக்களமாக - குற்றவாளிகளின் வேட்டைக்காடாக மாறிவரும் தமிழ்நாடு!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் கடும் கண்டனம்!



சென்னை, அக்.27-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று முன்தினம் (25.10.2026) விடுத்த வலைதளப் பதிவில், "தி.மு.க. கட்டமைத்த தமிழ்நாடு, இன்று த.வெ.க. ஆட்சியில் கொடுங்காடாகி விட்டது" என்றும் "கொலைக்களமாகவும் குற்றவாளிகளின் வேட்டைக்காடாகவும் தமிழ்நாடு மாறி வருகிறது!" என்றும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

நமது மாநிலத்திற்கு 'தமிழ்நாடு' எனப் பெயர் சூட்டி, அதன் உள்கட்டமைப்பையும் வளர்ச்சியையும் மேம்படுத்தியது தி.மு.க. ஆட்சி. விஜய் தலைமையிலான த.வெ.க ஆட்சியில் நமது தமிழ்நாடு, மனிதர்கள் வாழத் தகுதியில்லாத மாநிலமாக மாறி வருகிறது.

கடந்த இரண்டு மாதங்களில் தமிழ்நாட்டில் தொடர்ச்சியாக நடைபெற்று வரும் கொலைகள், கொள்ளைகள், போதைப் பொருள் விவகாரங்கள், பெண்கள் மீதான பாலியல் குற்றங்கள், சிறுமிகளுக்கும்கூட பாதுகாப்பில்லாத நிலை, மோசமாகச் சீரழிந்துள்ள சட்டம்-ஒழுங்கு நிலவரம் ஆகிய வற்றைப் பட்டியலிட்டு கழகத் தலைவர் அவர்கள் தனது சமூக வலைதளப்பக்கத்தில் பதிவிட்டுள்ள செய்தியில், "இது நாடா? இல்லை காடா? என்று தேர்தலுக்கு முன் விஜய் பேசியது இதைத் தானா?" எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

கழகத்தலைவரின் வலைதளப் பதிவு வருமாறு :-

த.வெ.க. ஆட்சியில் Wild Wild Tamil Nadu..!

கடந்த இரு மாதங்களாகத் தமிழ் நாட்டில் முன்னெப்போதும் இல்லாத அளவுக்கு நடைபெற்று வரும் கொலை, கொள்ளை, பாலியல் வன்கொடுமை மற்றும் சிறுவர்கள் மாயமாகும் சம்பவங்களால் பொது மக்கள் பீதியில் உறைந்து போயுள் ளனர். இதை முன்பே கணித்துத் தான், "இது என்ன நாடா இல்லை காடா?" என நாஸ்ட்ரடாமஸ் போல தேர்தலுக்கு முன்பு விஜய் அவர்கள் பேசினாரா?

'துப்பாக்கி ஹீரோ' எனத் திரை



யில் பார்த்ததை நம்பி வாக்களித்த மக்களே, குற்றங்களைத் தடுக்கத் 'துப்பில்லாத ஹீரோ' எனப் பேசத் தொடங்கிவிட்டனர். கோட் சூட் – பட்டு வேட்டி சட்டை அணிவதும், கான்வாயில் வந்து செல்வதும் மட்டும்தான் முதலமைச்சரின் பணி என்ற மூட நம்பிக்கையில் இருந்து எப்போது விடுபடுவார் திரு. விஜய்?

முதமைச்சருக்கான அலுவலகத்தையும், இல்லத்தையும் தயார் செய்வது தொடர்பான வேலைகளைத் தவிர, ஆறு மாத த.வெ.க. ஆட்சியில் உருப்படியாக வேறு ஒன்றுமே நடந்ததாகத் தெரிய வில்லை.

தனது சொகுசைப் பற்றி இருக்கும் அக்கறையில் சிறிதேனும் பொது மக்கள், குழந்தைகளின் பாதுகாப்பில் முதலமைச்சருக்கு இருக்க வேண்டும்.

கொலைக்களமாகவும் குற்ற வாளிகளின் வேட்டைக்காடாகவும் தமிழ்நாடு மாறி வருவது தடுத்து நிறுத்தப்பட வேண்டும்.

இவ்வாறு கழகத் தலைவர் குறிப்பிட்டுள்ளார்.

பள்ளி மாணவர்களுக்கான இலவச

சைக்கிள் கொள்முதலில் ரூ.78 கோடி ஊழல்!

"த.வெ.க.வின் பார்ட்டி ஃபண்டுக்கு போகிறதா?" என சமூக ஆர்வலர்கள் கேள்வி!

சென்னை, அக். 27 -

அரசு பள்ளி மாணவர்களுக்கான இலவச சைக்கிள் திட்டத்தில் த.வெ.க. அரசு 78 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் செய்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அரசு மற்றும் அரசு உதவிப் பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர் களுக்கு இலவச மிதிவண்டி திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. முந்தைய தி.மு.க. ஆட்சி இத்திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியநிலை யில், தற்போதைய த.வெ.க. ஆட்சி ஸ்டிக்கர் ஒட்டி பெயர் மாற்றம் செய் துள்ளது. இந்நிலையில், ஹீரோ சைக்கிள்ஸ் எனும் இத்திட்டத்தில் த.வெ.க. அரசு 78 கோடி ரூபாய் அளவுக்கு ஊழல் செய்துள்ளதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது.

அமேசானில் ஹீரோ சைக்கிள் 5 ஆயிரத்து 907 ரூபாய்க்கு விற் கப்படும்நிலையில், வெளிச்சந்தை யில் 7 ஆயிரத்து 363 ரூபாய் கொடுத்து விஜய் அரசு வாங்குகி றது. ஒவ்வொரு சைக்கிளுக்கும் கூடுதலாக ஆயிரத்து 456 ரூபாய் செலவிடப்படுவதாக குற்றச்சாட்டு எழுந்துள்ளது. இது எந்த வகை ஊழல் என த.வெ.க. அரசுக்கு பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மொத்தமாக கொள்முதல் செய் யும்போது, விலை அமேசானை விட குறைய வேண்டுமே தவிர, அதிகரிக்கக் கூடாது என்பது கூட த.வெ.க. அரசுக்கு தெரியாதா? என்று பலரும் வினவியுள்ளனர். எதிலும் அடிப்படை புரிதல் இல்லாமல் செயல்பட்டு வரும் விஜய் அரசால் தமிழ்நாட்டு மக்களின் வரிப்பணம் வீணாவ தாக சமூக ஆர்வலர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

5 லட்சத்து 32 ஆயிரத்து 388 நவீன சைக்கிள்களை வாங்க அமேசானில் 314 கோடி ரூபாய் மட்டுமே செலவாகும்நிலையில், வெளிச்சந்தையில் 392 கோடி கொடுத்து விஜயின் டம்மி அரசு கொள்முதல் செய்கிறது. ஹீரோ சைக்கிள் திட்டத்தில் செய்யப்பட்ட 78 கோடி ரூபாய் ஊழல், த.வெ.க.வின் பார்ட்டி ஃபண்டுக்கு போகிறதா என சமூக வலைதளங் களில் கேள்வி எழுப்பப்பட்டு வருகிறது.

புதிய உச்சத்தில்

வெங்காயம் விலை - ஒரு கிலோ ரூ.100 !

அத்தியாவசியப் பொருட்களைத் தொடர்ந்து காய்கறி விலையும் உயர்வு!

சென்னை, அக். 27 -

வெங்காயம் விலை மீண்டும் புதிய உச்சத்தை தொட்டுள்ளது. சில்லரை விற்பனையில் கிலோ 100 ரூபாய் வரை விற்பனை யாகிறது.

அத்தியாவசியப் பொருட்களின் விலை உயர்வைத் தொடர்ந்து, காய்கறிகளின் விலையும் உயர்ந்துள்ளது. குறிப்பாக வெங்காயம் விலை புதிய உச்சத்தை எட்டியுள்ளது. மகாராஷ்டிர மாநிலம் நாசிக் மற்றும் கர்நாடகாவின் பிற பகுதிகளில் இருந்து கோயம்பேடு சந்தைக்கு வெங்காயம் இறக்குமதி செய்யப்பட்டு, விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் வெளி மாநிலங்களிலிருந்து கோயம்பேடு சந்தைக்கு வரத்து கணிசமாக குறைந்ததால் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.

சென்னை கோயம்பேடு மொத்த விற்பனைச் சந்தையில் முதல் தர வெங்காயம் கிலோ 80 ரூபாய்க்கும், இரண்டாம் தர வெங்காயம் கிலோ 70 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. மொத்த விற்பனைச் சந்தையில் இருந்து சில்லறை விற்பனைக் கடைகளுக்குச் செல்லும் போது விலை மேலும் அதிகரிப்பதால், பொது மக்கள் கூடுதல் தொகை செலவிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

கொலீஜியம் கூடுவதற்கு முன்பே சில பெயர்கள் குறித்து ஆலோசனை!

நீதிபதிகள் நியமனத்தில் ஒன்றிய அரசு தலையீடு!

உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி தகவல்!

புதுடெல்லி, அக். 27 -

நீதிபதிகள் நியமனத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு தலையிடுவதாக உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் தனது புத்தகத்தில் தெரிவித்துள்ளது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

உச்சநீதிமன்ற முன்னாள் நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் 'தி ஃபியர் ஆர் ஃபேவர்' என்ற தலைப்பில் புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார். விரைவில் வெளியாக உள்ள இந்த புத்தகத்தின் சில முக்கிய விவரங்கள்



ஊடகங்களில் கசிந்துள்ளன.

அதில், நீதிபதிகள் நியமன விவகாரத்தில் அப்போதைய தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் மோடி அரசிடம் அளவுக்கு அதிகமாக பணிந்து நடந்து கொண்டதாக நீதிபதி சஞ்சய் கிஷன் கவுல் தெரிவித்துள்ளார். நீதிபதிகள் நியமனத்தில் ஒன்றிய அரசின் தலையீடு இருந்தது என்றும், அதற்கான ஆதாரங்களையும் நீதிபதி கவுல் தனது புத்தகத்தில் வெளியிட்டுள்ளார்.

நீதிபதிகள் நியமனத்திற்கான கொலீஜியம் கூடுவதற்கு முன்பே சில பெயர்கள் குறித்து அரசிடம் முன்கூட்டியே ஆலோசனை நடத்த முன்னாள் தலைமை நீதிபதி டி.ஒய்.சந்திரசூட் விரும்பினார் என்றும் நீதிபதி கவுல் குற்றம் சாட்டியுள்ளார்.

நீதிபதிகள் நியமனத்தில் அரசின் தலையீடு, கொலீஜியம் கூடுவதற்கு முன் அரசின் ஒப்புதலைப் பெற மேற்கொள்ளப்படும் முயற்சிகள், சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்த நீதிபதி ஒருவரின் சாதி குறித்து அரசு எழுப்பும் கேள்வி உள்ளிட்ட பல கவலைக்குரிய சம்பவங் களை நீதிபதி கவுல் தனது புத்தகத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

உத்தரப் பிரதேசத்தில் முறைகேடுகள் அம்பலமானதையொட்டி

அனைத்து எஸ்.ஐ.ஆர். படிவங்களையும் மறுஆய்வு செய்க!

மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி உத்தரவு!

லக்னோ, அக். 27 -

உத்தரப் பிரதேசத்தில், வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் அம்பலமானதைத் தொடர்ந்து, கணினி ஆப்பரேட்டர்கள் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து எஸ்.ஐ.ஆர். படிவடிங்களையும் மறுஆய்வு செய்ய அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி உத்தரவிட்டுள்ளார்.

உத்தரப் பிரதேச மாநிலம் பிலிபித் சதர் தொகுதியில் முறையான விண்ணப்பப் படிவங்கள் அல்லது ஆதார ஆவணங்கள் ஏதுமின்றி 10 ஆயிரத்து 470 திருத்தங்கள் அங்கீகரிக்கப்பட்டது விசாரணையில் அம்பலமானது. இது தொடர்பாக இரண்டு துணைத் தேர்தல் பதிவு அதிகாரிகள் மற்றும் ஒரு கணினி ஆபரேட்டர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு, துறை ரீதியான நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன.

இதேபோல், அசம்கர் தொகுதியில் விகாஸ் யாதவ் என்ற ஒரே வாக்காளரின் பெயர் வெவ் வேறு வாக்குச்சாவடிப் பட்டியல்களில் 13 இடங்களில் இடம்பெற்றிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அங்கு பணியாற்றிய 5 வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் உள்ளிட்ட 9 தேர்தல் அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த ஏப்ரல் 10 அன்று இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டதிலிருந்து, கணினி ஆப்பரேட்டர்கள் மூலமாக உள்ளீடு செய்யப்பட்ட அனைத்து பெயர் சேர்த்தல், பெயர் நீக்கம் மற்றும் திருத்தங்கள் தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட அனைத்து படிவங்கள் அனைத்தையும் மீண்டும் சரிபார்க்க மாவட்ட தேர்தல் அதிகாரிகளுக்கு, அம்மாநில தலைமைத் தேர்தல் அதிகாரி நவதீப் ரின்வாட உத்தரவிட்டுள்ளார்.

வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் மற்றும் போலிப் பதிவுகள் இருப்பதாக சமாஜ்வாதி கட்சி குற்றம் சாட்டியதை அடுத்து இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளது.